49.
605

09 MAR 2021

## சுருக்கம்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் – கல்வி கட்டணச் சலுகைகள் – அரசு பல்கலைக்கழகம் / அரசு கல்லூரி / அரசு உதவிப்பெறும் கல்லூரிகளில் பயிலும் ஆதிதிராவிடர் / பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய கிருத்துவ ஆதிதிராவிடர் மாணாக்கர்களுக்கு கற்பிப்புக் கட்டண விவரங்களை இணையவழியில் பெற்று புதிய நடைமுறைப்படி தகுதியான மாணாக்கர்களுக்கு 2021–2022 கல்வியாண்டு முதல் அவர்களுடைய வங்கிக் கணக்கில் வரவு வைத்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதிந–3) துறை**

அரசாணை (ப) எண். 41

நாள்: 02.03.2021
சார்வரி வருடம் மாசி 18,
திருவள்ளுவர் ஆண்டு 2052
படிக்கப்பட்டது.

1. அரசாணை (நிலை) எண்.722, சமுக நலத்துறை, நாள் 13.10.1977.
2. ஆதிதிராவிடர் நல ஆணையரின் கடித ந.க. எண். ஜே4/7057/2019, நாள்.15.04.2019 , 24.12.2020 மற்றும் 08.02.2021

-----

**ஆணை :–**

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், கல்லூரிகளில் (P.U.C. படிப்பிற்கு மேற்பட்ட படிப்புகளுக்கு) பயிலும் ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் கிருத்துவ மதம் மாறிய ஆதிதிராவிடர் மாணவ / மாணவியர்களுக்கு அவர்களது பெற்றோர் / பாதுகாவலரின் ஆண்டு வருமானத்தை கணக்கில் கொள்ளாமல் கற்பிப்பு கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களித்து ஆணையிடப்பட்டுள்ளது. மேலும், இந்த ஆணையினை பின்பற்றி அரசு / அரசு உதவி பெறும் கல்லூரிகளில் பயிலும் ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் கிருத்துவ மதம் மாறிய ஆதிதிராவிடர் மாணவ / மாணவியர்களுக்கு மட்டும் கற்பிப்பு கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் அரசு / அரசு உதவிப்பெறும் கல்வி நிறுவனங்களில் பயிலும் SC/ST/SCC மாணாக்கர்களுக்கான கற்பிப்புக் கட்டணத்தை பின்வரும் காரணங்களினால் புதிய நடைமுறைப்படி இணைய வழியில் மாணாக்கர்களின் வங்கி கணக்கில் செலுத்துவதற்கு ஆணை வழங்குமாறு ஆதிதிராவிடர் நல ஆணையர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்:–

I. இத்திட்டத்தின் கீழ் பயன்பெறும் மொத்த மாணாக்கர்களில் 99% சதவீத மாணாக்கர்களின் பெற்றோர் குடும்ப ஆண்டு வருமானம் ரூ.2.50 இலட்சம் ரூபாய்க்கு குறைவான ஆண்டு வருமானம் கொண்டவர்களாக உள்ளனர். 1% சதவீதத்திற்கும் குறைவான மாணாக்கர்கள் மட்டுமே குடும்ப வருமானம் ரூ.2.50 இலட்சம் ரூபாய்க்கு மேற்பட்டதாக இருப்பர்.

II. இத்திட்டத்தினை இணையவழியில் செயல்படுத்துவதன் மூலம் 99% சதவீத மாணாக்கர்கள் சார்ந்த கற்பிப்புக்கட்டண தொகை மத்திய அரசு போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித்தொகை திட்டத்தின் கீழும், 1% சதவீத மாணாக்கர்கள் மட்டுமே மாநில அரசு போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித்தொகை திட்டத்தின் கீழ் பயன்பெறுவர், இதனால் மாநில அரசிற்கு நிதி சேமிப்பு ஏற்படும்.

III. போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித்தொகை திட்டத்தின் கீழ் இணைய வழியில் ஏற்கனவே மாணாக்கர்களின் விவரங்கள் பெறப்பட்டுள்ளதால் இத்திட்டம் இணைய வழியில் செயல்படுத்துவதில் சிரமம் ஏதுமில்லை.

IV. கற்பிப்புக் கட்டணங்களை இணைய வழியில் செயல்படுத்துவதன் மூலம் அரசு / அரசு உதவிப்பெறும் கல்வி நிறுவனங்களில் பயிலும் மாணாக்கர்களின் கல்வி கட்டணம் அந்தந்த கல்வியாண்டுகளிலேயே வழங்குவதால் மாணாக்கர்கள் அவர்களின் கல்வியில் முழு கவனம் செலுத்த பேருதவியான அமையும்.

<u>புதிய நடைமுறை</u>

University approved Fee Structure

⇩

DADWO Approved

⇩

All fees include Tuition fee Maintenance

Allowance go to Student account

3. ஆதிதிராவிடர் நல ஆணையரின் கருத்துருவினை, அரசு கவனமுடன் பரிசீலனை செய்து அதனை ஏற்று 2021–2022 ஆம் கல்வியாண்டு முதல், அரசு பல்கலைக்கழகம் / அரசு கல்லூரி / அரசு உதவிப்பெறும் கல்லூரிகளில் பயிலும் ஆதிதிராவிடர் / பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய கிருத்துவ ஆதிதிராவிடர் மாணாக்கர்களுக்கு கற்பிப்புக் கட்டண விவரங்களை மேற்காணும் புதிய நடைமுறைப் படி இணையவழியில் பெற்று தகுதியான மாணாக்கர்களுக்கு அவர்களுடைய வங்கி கணக்கில் செலுத்திடவும் மற்றும் இணையவழி மென்பொருளில் தேவையான மாற்றம் செய்திடவும் ஆதிதிராவிடர் நல ஆணையருக்கு அனுமதி அளித்து அரசு ஆணையிடுகிறது.

4. இவ்வரசாணை நிதித்துறையின் அலுவல் சாரா எண். 30427/நிதித் (ஆதி(ம)பந) துறை/ 2020, நாள்.07.12.2020–இல் பெறப்பட இசைவுடண் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஷம்பு கல்லோலிகர்,
அரசு முதன்மைச் செயலாளர். (முகூபொ)

பெறுநர்:–
ஆணையர், ஆதிதிராவிடர் நலம்,
சென்னை–600 005.
இயக்குநர், பழங்குடியினர் நலம், சென்னை–600 005.

அனைத்து மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்கள்.

நகல்:—
மாண்புமிகு ஆதிதிராவிட நல அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர்,
சென்னை—600 009.
நிதித் (ஆதி(ம)பந ) துறை, சென்னை—600 009.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் முதன்மைச் செயலாளரின்
தனிச்செயலர், சென்னை—600 009.
இருப்புக் கோப்பு / உதிரி

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

3/3/2021

பிரிவு அலுவலர்

3/3/2021